Reg. No. 31/2020

**வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்**

(A Movement for Justice through Legal Aid)

வாயில்லா, வழியில்லா உயிர்களின் நீதிக்கான சட்ட உதவி இயக்கம்

...வானமே எல்லை...

# தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005

## The Right to Information Act, 2005

சட்ட விழிப்புணர்வு
மற்றும்
சட்ட நுண்பகுப்பு
ஆய்வறிக்கை

**சட்ட இதழ் - 01**


டாக்டர். **ரமேஷ் மகாதேவ்**, எல்.எல்.எம்., பி.ஹெச்.டி. (சட்டம்)
நிறுவனர்
அம்மா மல்லிகா – மகேஸ்வரி அன்னதான அறக்கட்டளை
வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
உயர்நீதிமன்ற வழக்கறிஞர் / மேனாள் உதவி ஆணையர்
வல்லுநர் குழு வழக்கறிஞர் – இந்து சமய அறநிலையத்துறை
Email : drrameshmahadevadvocate@gmail.com
Website : www.vaanamaeellai.org






"என் அம்மா என் தெய்வம்"


0452-4352690, 72003 89831

# புத்தக வெளியீடுகள்



Reg. No. 31/2020
வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
(A Movement for Justice through Legal Aid)
வாயில்லா, வழியில்லா உயிர்களின் நீதிக்கான சட்ட உதவி இயக்கம்
Cell : 7200389831
www.vaanamaeellai.org
தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005
The Right to Information Act , 2005
(பல்வகை எளிமையான மாதிரிப் படிவங்கள், முக்கிய தீர்ப்புகளுடன் கூடிய முழுமையான தகவல்களுடன்)
NEW EDITION
Human
Rights
Democracy
டாக்டர். ரமேஷ் மகாதேவ், எல்.எல்.எம்., பி.ஹெச்.டி (சட்டம்)
உயர்நீதிமன்ற வழக்கறிஞர் / நிறுவனர் / மேனாள் உதவி ஆணையர்
வல்லுநர் குழு வழக்கறிஞர் – இந்து சமய அறநிலையத்துறை




Reg. No. 31/2020
வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
(A Movement for Justice through Legal Aid)
வாயில்லா, வழியில்லா உயிர்களின் நீதிக்கான சட்ட உதவி இயக்கம்
அரசு ஊழியர் பணி ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள்
[தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளுடன்]
டாக்டர். ரமேஷ் மகாதேவ், எல்.எல்.எம்., பி.ஹெச்.டி (சட்டம்)
உயர்நீதிமன்ற வழக்கறிஞர் / நிறுவனர் / மேனாள் உதவி ஆணையர்
வல்லுநர் குழு வழக்கறிஞர் – இந்து சமய அறநிலையத்துறை

# சட்ட விழிப்புணர்வு மற்றும் சட்ட நுண்பகுப்பு ஆய்வறிக்கை

**சட்ட இதழ் – 01**

## உள்ளே...

### தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005
### The Right to Information Act, 2005


ஓர் அறிமுகம்

யாரிடம் கேட்கலாம்

இச்சட்டத்தின் கீழ் "தகவல்"

என்னென்ன முறையில் தகவல் பெறலாம்

தகவல் பெறுவதற்கான கால அவகாசம்

தகவல் பெறக் கட்டணம்

விண்ணப்பம் (மனு) (மாதிரி படிவம்)

என்னென்ன தகவல் கேட்கலாம்

விண்ணப்பம்

கட்டணச்சலுகை

கட்டணம் செலுத்தும் முறை

விண்ணப்பம் யாருக்கு அனுப்பப்பட வேண்டும்

விண்ணப்பத்தின் மீதான நடவடிக்கைகள்

தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுதாரருக்கு பொதுத்தகவல் (அ) மேல்முறையீட்டு அலுவலரால் பதில் அளிக்க மாநில தகவல் ஆணையத்தால் அறிவுறுத்தப்படும் மாதிரிப் படிவம்

தகவல் மறுக்கப்பட்டதாக பொருள்

மூன்றாம் தரப்பினர் தகவல்

தகவல் வழங்குவதற்கான கூடுதல் கட்டணங்கள்

முதல் மேல்முறையீடு

இரண்டாவது மேல்முறையீடு

விலக்களிக்கப்பட்ட தகவல்கள்

தகவல் ஆணையம்

ஆணையத்திற்கு நீதிமன்ற அதிகாரம்

தகவல் வழங்கும் அலுவலர்களின் தவறுகைக்கு எதிரான முறையீடு (புகார்)

முக்கியத்துவம் வாய்ந்த சில தீர்ப்புகள்

தகவல் பெறும் உரிமை இனி இணைய வழியில் : விண்ணப்பம்




# தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005
## The Right to Information Act, 2005


பதிப்புரிமை : நூல் ஆசிரியர்
© Rights reserved with the Author



ஆசிரியர் :

டாக்டர். ரமேஷ் மகாதேவ், எல்.எல்.எம்., பி.ஹெச்.டி. (சட்டம்)



வெளியீடு :

**வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்**

3/145, கே.பி.பி. டவர், கோடக் மகிந்திரா வங்கி மேல்தளம்,
(மீனாட்சி மிஷன் மருத்துவமனை அருகில்)
மேலூர் மெயின் ரோடு, உத்தங்குடி, மதுரை-625 107.

Email : drrameshmahadevadvocate@gmail.com

தொடர்புக்கு : 0452-4352690, 72003 89831 (WhatsApp)

Website : www.vaanamaeellai.org



இச்சட்ட இதழினை வெளியிடுவதற்குரிய எல்லா கவனமும் எடுத்துக் கொள்ளப்பட்டு வெளியிடப்படுகிறது. எனவே இதில் இருக்கக் கூடிய பிழை, அச்சுப்பிழை அல்லது விடுபட்டது ஆகியவற்றால் ஏற்படும் எவ்விதமான இழப்பிற்கும் நூல் ஆசிரியர், வெளியீட்டாளர் மற்றும் அச்சகத்தார் பொறுப்பல்ல.

# தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005
# The Right to Information Act, 2005

(சட்ட விழிப்புணர்வு மற்றும் சட்ட நுண்பகுப்பாய்வு பார்வையில்)

## ஓர் அறிமுகம்

அரசு மற்றும் அரசு சார்ந்த அமைப்புகளின் ஒளிவு மறைவற்ற வெளிப்படை நிர்வாக தன்மையினை உறுதிபடுத்திடும் நோக்கத்துடனும், அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களில் செயலாற்றுபவர்களிடையே பொறுப்புடைமையை மேம்படுத்தவும், அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களின் செயலாற்றல் குறித்த தகவல்களை பெற விரும்பும் குடிமக்களுக்கு, அதை வழங்க வகை செய்வதோடு ஊழலைக் கட்டுப்படுத்தி தவிர்ப்பதும், அரசு அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும் துறைகள், மக்களுக்குத் தேவையான தகவல்களைத் தரக் கடமைப்பட்டுள்ளதை உறுதி செய்வதும், அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களைப் பொறுப்புடையதாக்குவதோடு உள்ளார்ந்த தகவல்களின் ரகசியத்தைக் கட்டிக்காப்பதும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கங்களாகும்.

தகவல் அறியும் உரிமை இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் அரசியலமைப்பு சட்டம் உறுப்பு 19 (a)–ன் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை மற்றும் சட்டப்பூர்வமான உரிமை ஆகும்.[1] மேற்படி உரிமையின் செயலாக்கத்திற்காக இந்திய நாடாளுமன்றத்தால் அரசு மற்றும் அரசு உதவிபெறும் நிறுவனங்களிடமிருந்து மக்கள் உரிமையுடன் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக உருவாக்கப்பட்ட சட்டமே தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 ஆகும்.

இச்சட்டம், 2004 டிசம்பர் மாதம், நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு 2005 மே 11 அன்று மக்களவையிலும், 2005 மே 12 அன்று மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது. 2005 சூன் 15 அன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது. 2005 சூன் 21 அன்று அரசு பதிவிதழில் வெளியிடப்பட்டு 2005 அக்டோபர் 12 அன்று முதல் நடைமுறைக்கு வந்தது. இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியாவின் பிறப்பகுதிகள் அனைத்திற்கும் பொருந்தும்.

ஒவ்வொரு பொது அதிகார அமைப்பும் தங்கள் பதிவுகளை பரந்த அளவில் பரப்புவதற்கும், சில வகை தகவல்களை முன்கூட்டியே கணினி மயமாக்குவதற்கும் இந்த சட்டம் வழிவகைகள் செய்கிறது[2].

இந்தச் சட்டத்தின் கீழ், இந்தியாவின் எந்தவொரு குடிமகனும்[3] ஒரு "பொது அதிகார ("அரசாங்க அமைப்பு" அல்லது "அரசின் கருவி") அமைப்பிலிருந்து" தகவல்களைக் கோரலாம். உடனடியாகவோ அல்லது முப்பது நாட்களுக்குள்ளோ வழங்க (அல்லது) பதிலளிக்க வேண்டும்.

## யாரிடம் கேட்கலாம்

ஒவ்வொரு மத்திய மற்றும் மாநில அரசுத்துறை அலுவலகத்திலும் ஒரு “பொதுத் தகவல் அலுவலர்” மற்றும் “ஒரு மேல் முறையீட்டு அலுவலர்” நியமிக்கப்பட்டுள்ளார். தகவல் கோருபவர் – பொதுத் தகவல் அலுவலரிடம் மனு செய்யலாம்.



வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
0452 4352690, 72003 89831
www.vaanamaeellai.org

**இச்சட்டத்தின் கீழ் "தகவல்" என்பது** பதிவுருக்கள், ஆவணங்கள், குறிப்பாணைகள், மின்னஞ்சல்கள், கருத்துரைகள், அறிவுரைகள், செய்தி வெளியீடுகள், சுற்றறிக்கைகள், ஆணைகள், நாள்விவரக் குறிப்பேடுகள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், தாள்கள், மாதிரிகள், மாதிரிப் படிவங்கள், மின்னியக்க வடிவில் பதிவு செய்யப்பட்டுள்ளத் தகவல்கள் மற்றும் நடைமுறையில் உள்ள வேறு சட்டத்தின் கீழ் அரசு அலுவலர்கள் மேற்பார்வையிடும் அதிகார வரம்புக்குள் வரும் எவ்விதமான தனியார் குழுமமாக இருந்தாலும் அவைத் தொடர்பான செய்திகளும், தகவல்களும் இதில் அடங்கும்.

## என்னென்ன முறையில் தகவல் பெறலாம்

மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் அரசின் பொதுத்துறை மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்களின்

- ஆவணங்கள், மற்றும் பதிவேடுகளை நேரில் பார்வையிடலாம், குறிப்பெடுக்கலாம்.
- ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளின் சான்றிட்ட நகல்களைப் பெறலாம்.
- சான்றிட்ட பொருள் மாதிரிகள், உருவமாதிரிகள் பெற்றிடலாம்.
- தகவலானது கணினியில் அல்லது வேறு சாதனம் எதிலும் பதிவு செய்யப் பட்டிருக்கும்பொழுது, அதனை குறுந்தகடுகள், ஒலி நாடாக்கள், ஒலி–ஒளிக்காட்சி நாடா பேழைகள், மின்னஞ்சல் உள்ளிட்ட வேறு வகையான மின்னணு வழிகளில் அல்லது தொடர்புடைய எந்த வடிவிலும் தகவலைப் பெறும் உரிமையும் இதில் அடங்கும்.

### தகவல் பெறுவதற்கான கால அவகாசம்

| தகவல் விவரம் | சட்ட பிரிவு விவரம் | கால அவகாசம் |
|---|---|---|
| தகவல் தர (அ) நிராகரிக்க | பிரிவு 7 (1) | 30 நாட்கள் |
| கேட்கப்படும் தகவல் ஒருவரின் உயிர் அல்லது சுதந்திரம் தொடர்பானதாக இருப்பின் | பிரிவு 7 (1) (வரம்புரையில்) | 48 மணி நேரம் |
| சம்பந்தமில்லா துறைக்கு அனுப்பப்பட்ட மனுவை சரியான துறைக்கு அனுப்ப தேவைப்படும் கூடுதல் நாட்கள் | பிரிவு 6 (3) | 5 நாட்கள் |
| மூன்றாம் நபர் பற்றிய தகவலுக்கு கடிதம் எழுத | பிரிவு 11 (1) | 5 நாட்கள் |
| மூன்றாம் நபர் பதில் அளிக்க | பிரிவு 11 (2) | 10 நாட்கள் |
| மூன்றாம் நபர் பற்றிய தகவல் அளிக்க | பிரிவு 11 (3) | 40 நாட்கள் |
| குறைபாடுடையதாகக் கருதப்படும் பதில் (அ) மனுவிற்கு, முதல் மேல் முறையீடு செய்ய | பிரிவு 19 (1) | 30 நாட்கள் |
| இரண்டாம் மேல் முறையீடு (தகவல் ஆணையத்திற்கு) செய்ய | பிரிவு 19 (3) | 90 நாட்கள் |

## தகவல் பெறக் கட்டணம்

மத்திய அரசு அலுவலகம் மற்றும் நிறுவனங்களுக்கு ரூ.10/– மாநில அரசு அலுவலகம் மற்றும் நிறுவனங்களுக்கு ரூ.10/– எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## விண்ணப்பம் (மனு) (மாதிரி படிவம்)

### தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6 (1)—ன் கீழ் மனு

(ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவு அஞ்சல்)

அனுப்புநர் :–

டாக்டர். ரமேஷ் மகாதேவ் செல் : 72003 89831
3/145, கே.பி.பி. டவர்,
கோடக் மஹிந்திரா பேங்க் மேல்தளம்,
(மீனாட்சி மிஷன் மருத்துவமனை அருகில்)
மேலூர் மெயின் ரோடு, உத்தங்குடி, மதுரை – 625 107.



பெறுநர் :–

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை.

ஐயா,

பொருள்: தகவல் பெறும் உரிமை சட்டம், 2005 – மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், திருமோகூர் கிராமத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட குடிமராமத்து பணிகள் பிரிவு 6 (1)–ன் கீழ் தகவல்கள் கோருதல் – தொடர்பாக

1. பொருளில் காணும் திருமோகூர் கிராமத்தில், அரசினால் மேற்கொள்ளப்பட்ட குடிமராமத்து பணிகளின் ஏரி வாரியாக பணி ஒப்பந்தம் குறித்து பின்வரும் விபரங்கள் அடங்கிய கோப்புகளின் நகல்களை வழங்கிட கோருகிறேன்.
   - (i) Design of Structures
   - (ii). Tender Notices
   - (iii) Bids submitted by various Bidders
   - (iv). Comparisons of Bids
   - (v) Awarding of Contract உள்ளிட்டவற்றின் நகல் வழங்கவும்.
2. ஏரிகளின் குடிமராமத்து பணிகளின் ஏரி வாரியாக அளவுப் பதிவேட்டின் (M.Book) விபரங்கள் நகல் வழங்கிட கோருகிறேன்.
3. ஏரிகளின் குடிமராமத்து பணிகளின், ஏரி வாரியாக பணி நிறைவு அறிக்கையின் (Work Completion Certificate) நகல் வழங்கிட கோருகிறேன்.
4. ஏரிகளின் குடிமராமத்து பணிகளின் கீழ், ஏரி வாரியாக பணி நிறைவு புகைப்படங்கள் (Photographs with date of the various stages of works) விபரங்கள் நகல் வழங்கிட கோருகிறேன்.
5. ஏரிகளின் குடிமராமத்து பணிகளுக்காக தேதி வாரியாக தொகை வழங்கப்பட்ட (Payments made in various stages including final bills) விபரங்கள் நகல் வழங்கிட கோருகிறேன்.

மனுவிற்கு கட்டணமாக ரூ. 10/– மதிப்புள்ள நீதிமன்ற வில்லை இணைக்கப்பட்டுள்ளது.

தகவல் பெறும் உரிமை சட்டம் 2005 பிரிவு 6 (1)–ன் கீழ் மேற்கண்ட தகவல்களை சான்றிட்ட நகல்களாக வழங்கிட கோருகிறேன்.

கையொப்பம்
XXXXXXXX



வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
0452 4352690, 72003 89831
www.vaanamaeellai.org

## என்னென்ன தகவல் கேட்கலாம்

நாம் அரசிடம் எது பற்றி விண்ணப்பித்தாலும் 30 நாட்களுக்குள் விசாரணை செய்து மனுதாரருக்கு உரிய தகவலைத் தெரிவிக்க வேண்டும் என தமிழக அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் 02.08.06 தேதியிட்ட அரசாணை எண்.114 மற்றும் 21.09.2015 தேதியிட்ட அரசாணை எண். 99 சொல்கிறது. அதன்படி நாம் கொடுத்த மனுவிற்கு பதில் தரவில்லை (அல்லது) உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனில் அது பற்றிய காரணங்களைக் கேட்கலாம். அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பரிந்துரைத்த அலுவலரின் அறிக்கை நகல், வாக்குமூலங்களின் நகல்களைக் கேட்கலாம்.



## விண்ணப்பம்

தகவல் பெற விரும்பும் நபர் ஆங்கிலம் அல்லது இந்தி அல்லது விண்ணப்பம் செய்யப்படும் நிலப்பகுதியின் அலுவல் மொழியில் (தமிழ்) எழுத்து வடிவிலோ அல்லது மின்னஞ்சல் வழியாகவோ தகவலின் விவரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

இதற்கென்று தனியாக விண்ணப்பப் படிவம் ஏதும் இல்லை. ஒரு வெள்ளைத்தாளில் மனு எழுதியோ அல்லது தட்டச்சு செய்தோ அனுப்பினால் போதும். தமிழிலேயே மனு எழுதலாம். ஆங்கிலம் (அ) இந்தி (அ) அந்தந்த மாநில மொழியிலும் மனு எழுதலாம். விண்ணப்பம் தெளிவான எழுத்துக்களில், படித்து புரிந்து கொள்ளக்கூடிய அளவில் இருக்க வேண்டும்.

ஒரு விண்ணப்பத்தில் எத்தனை தகவல்கள் வேண்டுமானாலும் கேட்கப்படலாம். இருப்பினும் குறிப்பிட்ட அளவிலும், தொடர்புடைய தகவல்களாகவும் மற்றும் மனித வள ஆற்றலை வீணடிக்கும் வகையில் இல்லாமலும் இருத்தல் நல்லது.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்படும் தகவல்கள், கேள்வி வடிவத்திலோ, ஆலோசனை வழங்கும் விதத்திலோ, குறைதீர்வு கோரிக்கை மனு போலவோ விண்ணப்பம் இருத்தல் கூடாது.

வேண்டிய தகவலை சிறு கேள்விகள் மூலம் கேட்கலாம். நெடிய தகவல்கள் வேண்டி ஒரே விண்ணப்பத்தில் கேட்பதை தவிர்க்கவும். விண்ணப்பத்தில் உங்கள் பெயர், கையொப்பம் போதுமானது. பதவி மற்றும் இதர பொறுப்புகள் தேவையில்லை. தங்களுக்கு எதற்காக தகவல்கள் தேவைப்படுகின்றன என்பதை தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் தகவல் பெறுவது ஒவ்வொரு குடிமகனின் உரிமை.

கட்டணம் செலுத்தியதற்கான காசோலை, கேட்பு காசோலை, அஞ்சலக ஆணை ஆகியவை பற்றிய குறிப்புகளை, விண்ணப்பத்தின் இறுதியில் தவறாமல் குறிப்பிடுதல் நன்று.

## கட்டணச் சலுகை

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவரானால் அதற்கான சான்று நகல் இணைத்தால் போதும். விண்ணப்பம் கட்டணமின்றி ஏற்கப்படும்.

## கட்டணம் செலுத்தும் முறை

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கட்டணம் செலுத்தும் விதிமுறைகள் மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசப்பட்டவை.

தமிழக அரசு தொடர்பான அலுவலகங்களுக்குக் கட்டணமாக ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லையை (Court Fee Stamp) விண்ணப்பத்தில் ஒட்டி சமர்ப்பிக்கலாம் அல்லது பொது தகவல் அலுவலர், ....................... அலுவலகம் என்ற பெயரில் ரூ.10/–க்கான வங்கி வரைவோலை பெற்று அனுப்பலாம் அல்லது கீழ்க்காணும் தலைப்பில் அரசு கருவூலத்தில் ரூ.10/– செலுத்தலாம்.

> "0070.00 Other Administrative Services - 60 Other Services - 118 Receipts under Right to Information Act, 2005 - AA - Collection of fees under Right to Information (Fees) Rules, 2005" (DPC 0070 60 118 AA 005)

மத்திய அரசின் கீழ் வரும் துறைகளுக்கு / அலுவலகங்களுக்கான கட்டணம் ரூ.10/– த்தினை, மத்திய அஞ்சலகத்துறை, "Accounts Officer" என்ற பெயருக்கு வரைவோலை, கேட்பு காசோலை, அஞ்சலக ஆணை எடுத்து அனுப்பலாம்.

## விண்ணப்பம் யாருக்கு அனுப்பப்பட வேண்டும்

விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட பொது அதிகார அமைப்பின் மத்திய பொதுத் தகவல் அலுவலருக்கோ அல்லது மாநில பொதுத் தகவல் அலுவலருக்கோ அல்லது மத்திய உதவி பொதுத் தகவல் அலுவலருக்கோ அல்லது மாநில உதவி பொதுத் தகவல் அலுவலருக்கோ அனுப்பலாம்.

மனுக்களை நேரிலோ அல்லது அஞ்சலிலோ சமர்ப்பிக்கலாம். அஞ்சலில் அனுப்புவதாக இருப்பின் பதிவுத்தபாலில் அனுப்புவது சிறப்பானது.

எந்த பொது தகவல் அலுவலருக்கு விண்ணப்பிக்கிறீர்களோ, அவர் முகவரிக்கு விண்ணப்பம் எழுதலாம். ஒருவேளை அருகில் உள்ள பொது தகவல் அலுவலரின் தகவல்கள் அறிய முடியவில்லை எனில், பொது தகவல் அலுவலர், C/o தலைமை அலுவலர் என்று எழுதி, மாவட்ட உயர் அலுவலருக்கு உரிய கட்டணத்துடன் விண்ணப்பிக்கலாம். அந்த துறை தலைமை அலுவலர் அதனை உரிய தகவல் அலுவலருக்கு அனுப்புவார்.

பொதுத் தகவல் அலுவலரின் முகவரி குறித்து அறிய முடியவில்லை என்றால், மாநில அரசாக இருந்தால் தகவலைக் கேட்கும் மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியருக்கும், மத்திய அரசாக இருந்தால் தலைமைத் தபால் அலுவலருக்கும் மனுவை அனுப்பி வைக்கலாம். மாவட்ட ஆட்சியர் அலுவலக அலுவலர்களும்,


வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
0452 4352690, 72003 89831
www.vaanamaeellai.org

தலைமைத் தபால் துறை அலுவலக அலுவலர்களும் நம்முடைய மனுக்களை உரிய அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பார்கள். உரிய அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து விட்டு அதன் தகவலை 5 நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

மத்திய அரசு : அதேபோல் முகவரி தெரிந்தால் மத்திய அரசு அலுவலகங்களுக்கு நேரிடையாக அனுப்பலாம். சம்மந்தப்பட்ட அலுவலகம் எது என்று தெரியாவிட்டால் மட்டும் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

பெறுநர்:

அஞ்சலகங்களின் கண்காணிப்பாளர் அவர்கள்,
தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005,
ஊர்.............................. பின்கோடு ............................

:

மேற்படி கோடிட்டுள்ள இடத்தில் உங்கள் ஊருக்கு சம்மந்தப்பட்ட தலைமை அஞ்சல் அலுவலகம் இருக்கும் ஊரின் பெயரை எழுதி அனுப்பலாம் அல்லது மாவட்ட தலைமை அஞ்சல் அலுவலகத்திற்கு நேரில் சென்று விண்ணப்பக் கட்டணம் செலுத்தி (அவர்களின் அறிவுறுத்தல்களின்படி செயல்படலாம்) ரசீது பெற்றும் அனுப்பலாம்.

மத்திய அரசு நிறுவனங்களுக்கு மட்டும் முதல் மேல்முறையீட்டு முகவரி தெரியாவிட்டால் உங்கள் விண்ணப்பத்தில்

பெறுநர் :

மேல் முறையீட்டு அலுவலர்,
தகவல் பெறும் உரிமைச்சட்டம் – 2005
அஞ்சலகங்களின் இயக்குனர்
சென்னை / கோவை / திருச்சி / மதுரை

(நான்கில் பொருந்தும் ஊர் பெயர் மட்டும் குறிப்பிட வேண்டும்) உறை மீதும் இதே விலாசம்தான் எழுதி அனுப்ப வேண்டும்.

## விண்ணப்பத்தின் மீதான நடவடிக்கைகள்

கேட்ட தகவலைத் தர வேண்டிய காலம், பொதுத் தகவல் அலுவலர் மனுவை பெற்றுக் கொண்ட நாளிலிருந்து தொடங்குகிறது. விண்ணப்பம் கிடைத்த 30 நாட்களுக்குள் பொதுத் தகவல் அலுவலர் பதில் அளிக்கவேண்டும். கோரப்பட்ட தகவலானது, ஒருவருடைய உயிர் அல்லது சுதந்திரம் தொடர்புடையதாக இருப்பின், அதற்கான கோரிக்கை பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள் தகவல்களாக அளிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரரின் கோரிக்கையை ஏற்க மறுக்கும்போது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவுகள் 8 மற்றும் 9–ல் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு பொருத்தமான காரணத்தைச் சுட்டிக்காட்டி நிராகரிக்க வேண்டும்.

(மாதிரி படிவம்)

## தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுதாரருக்கு பொதுத்தகவல் (அ) மேல்முறையீட்டு அலுவலரால் பதில் அளிக்க மாநில தகவல் ஆணையத்தால் அறிவுறுத்தப்படும் மாதிரிப் படிவம்

**அலுவலக கடித எண் ..................... நாள் ............. 2023**

1. தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவின் எண் மற்றும் தேதி :
2. தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு பொதுத் தகவல் அலுவலரால் பெறப்பட்ட நாள் :
3. பிரிவு 6 (3)–ன் கீழ் வேறொரு அலுவலருக்கு மாற்றப்பட்டிருந்தால் :
   - (அ) அந்த அலுவலர் குறித்த விவரங்கள் :
   - (ஆ) மாற்றப்பட்ட தேதி :
   - (இ) அந்த அலுவலர் பதிலளிக்க வேண்டிய விவரம் (வரிசை எண்கள்) :
4. பதில் (மாற்றப்பட்ட வினாக்கள் தவிர்த்து) :

| வ.எண். | கேட்கப்பட்ட தகவல் | கொடுக்கப்படும் தகவல் / ஆவணங்களின் விவரங்கள் (அல்லது) தகவல் மறுக்கப்பட்டால் அதற்கான காரணம் மற்றும் அது தொடர்புடைய தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவின் விவரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

இது குறித்து மேல்முறையீடு செய்ய விரும்பினால், பதில் கிடைக்கப் பெற்ற 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம்.

கீழ்க்காணும் முகவரிக்கு மேல்முறையீடு அனுப்பலாம்

(அ). மேல்முறையீட்டு அலுவலர் பெயர்
(ஆ). பதவி விவரம்
(இ). அலுவலக முகவரி
(ஈ). அலுவலக தொலைபேசி எண்.
(உ). மின்னஞ்சல் முகவரி

பொதுத் தகவல் அலுவலர் கையொப்பம்

பெயர் :
பதவி விரம் :
அலுவலக தொலைபேசி எண் :
மின்னஞ்சல் முகவரி :

பெறுநர் :
(மனுதாரரின் பெயர், முகவரி விவரம்)



வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
0452 4352690, 72003 89831
www.vaanamaeellai.org

## நல்வாழ்விற்கான அமைதி வழி விலக்கல் (ஒதுக்கி வைத்தல்) கோட்பாடு (Doctrine of Peaceful Rejection (Exclusion) for a Good Life)

அறமற்ற செயல்கள் செய்வோர் யாராயினும் அவர்களை எதிர்க்க வேண்டாம். நம் வாழ்விலிருந்து அவர்களை அமைதி வழியில் (முற்றிலும்) அறவே ஒதுக்கி வைப்போம். இயல்பாகவே நலம் பெறும் இவ்வுலகம். நம் வீட்டிலிருந்தே தொடங்குவோம் இந்த அமைதி வழி அறப்புரட்சியை... இனிதே வெற்றி பெறுவோம்...

(உண்மையில் அப்போதுதான் இவ்வுலகத்தில் தவறுகள் குறையும். தவறு செய்பவர்களுக்கும் தாம் செய்வது தவறு என்பதும் புரிய வரும்)




டாக்டர். ரமேஷ் மகாதேவ், எல்.எல்.எம்., பி.ஹெச்.டி. (சட்டம்)
நிறுவனர்,
வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
அம்மா மல்லிகா – மகேஸ்வரி அன்னதான அறக்கட்டளை
உயர்நீதிமன்ற வழக்கறிஞர் / மேனாள் உதவி ஆணையர்
வல்லுநர் குழு வழக்கறிஞர் – இந்து சமய அறநிலையத்துறை


*ஒழுக்கமும், கட்டுப்பாடும் இல்லாதவர்களிடம் உள்ள அறிவை, அறிவு என்று சொல்வதற்கில்லை, அது விஷத்திற்கு ஒப்பானது.*

### தகவல் மறுக்கப்பட்டதாக பொருள்

விண்ணப்பத்தை மறுப்பதற்கான காரணத்துடன், அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து விண்ணப்பதாரர் எந்த காலக் கெடுவிற்குள், யாரிடம் மேல்முறையீடு செய்யப்பட வேண்டும் என்ற விவரங்களையும் தெரிவித்தல் வேண்டும்.

விண்ணப்பம் பொது தகவல் அலுவலருக்கு கிடைத்த 30 நாட்களுக்குள் தகவல் கொடுக்கப்படாமல், எவ்வித செயல்பாடும் இல்லையெனில் – தகவல் மறுக்கப்பட்டதாக பொருள் கொள்ளப்படும்.

### மூன்றாம் தரப்பினர் தகவல்

பொதுத் தகவல் அலுவலர், மூன்றாம் தரப்பினருடன் தொடர்புடைய அல்லது மூன்றாம் தரப்பினரால் வழங்கப்பட்ட அல்லது மூன்றாம் தரப்பினரால் ரகசியம் எனக் கருதப்படுகிற தகவல்கள், பதிவுருக்கள் அதன் பகுதிகள் எதனையும் வெளியிட வேண்டுமென்றால், அக்கோரிக்கை பெறப்பட்ட ஐந்து நாட்களுக்குள், அக்கோரிக்கையினை பற்றியும், அந்த தகவலை வெளியிட விரும்புகிறாரா என்றும் மூன்றாம் தரப்பினருக்கு எழுத்து வடிவிலான அறிவிப்பை அளிக்க வேண்டும்.[28] அந்த மூன்றாம் நபர் 10 தினங்களுக்குள் அதற்கு பதிலளிக்க வேண்டும்.[29] ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் பாதிப்பைத் தராத தகவலை மனு செய்த 40 தினங்களுக்குள் அளித்தல் வேண்டும்.[30]

## தகவல் வழங்குவதற்கான கூடுதல் கட்டணங்கள்

தகவல் உரிமை சட்டம், 2005, நியாயமான கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று கூறுகிறது. மேலும், தகவல் அளிப்பதற்கான கூடுதலான கட்டணம் தேவைப்பட்டால், எவ்வாறு அத்தொகைக் கணக்கிடப்பட்டு அக்கட்டணம் எட்டப்பட்டது என்று சுட்டிக்காட்டி, எழுத்துருவில் விண்ணப்பத்தாரருக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர் பொதுத்தகவல் அலுவலரால் விதிக்கப்பட்ட கட்டண நிர்ணய முடிவின் மீது, உரிய மேல்முறையீட்டு அலுவலரிடம் மறுஆய்வு செய்யுமாறு தேவையெனில் கோரலாம். வறுமை கோட்டிற்குக் கீழ் வாழ்பவருக்கு, கட்டணம் விதிக்கப்படுதல் கூடாது. பொதுத்தகவல் அலுவலர்/முதல் மேல்முறையீட்டு அலுவலர் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் தகவலை அளிக்கத் தவறினால், கட்டணமின்றி, [ஆவணங்கள் மற்றும் பிற முறைகளில் வழங்கும் தகவலுக்கான (ஒரு பக்கத்திற் ரூ.2/– CD, Floppy–க்கான ரூ.50/–) கட்டணம்] விண்ணப்பதாரருக்கு அத்தகவலை வழங்குதல் வேண்டும்.

## முதல் மேல்முறையீடு

நாம் கோரும் தகவலுக்கு பொதுத் தகவல் அலுவலரிடம் இருந்து 48 மணி நேரம் அல்லது 30 நாட்களுக்குள் பதில் கிடைக்கப் பெறவில்லை என்றாலோ, (உதவி தகவல் அலுவலரிடம் விண்ணப்பித்திருந்தால் 35 நாட்கள்) அல்லது கொடுத்த தகவல்/பதில் திருப்தி அளிக்கவில்லை என்றாலோ, தகவல் அளிப்பதற்காக கோரப்படும் கூடுதல் கட்டணம் அதிகமென்று விண்ணப்பதாரர் கருதினாலோ முடிவு பெறப்பட்ட 30 நாட்களுக்குள் அதே துறையின்/அலுவலகத்தின் முதன்மை மேல் முறையீட்டு அலுவலரிடம் நிறுவன நிலைமுறைப்படி (Hierarchy) முதன்மை மேல்முறையீட்டு அலுவலர் பொதுத்தகவல் அலுவலரைவிட உயர் பதவியிலிருப்பவராவார்) முதல் மேல்முறையீடு செய்யலாம். அப்படி செய்யும்போது மேல்முறையீட்டு மனுவுடன் முதலில் விண்ணப்பித்த மனுவின் நகலையும், பொது தகவல் அலுவலர் கொடுத்த பதில் கடிதத்தின் நகலையும் இணைக்க வேண்டும். இவ்வாறு மேல்முறையீடு செய்வதற்கு கட்டணம் ஏதும் இல்லை.

முதல் மேல்முறையீட்டு அலுவலர் 30 நாட்களுக்குள் தனது பதிலை அளிப்பார். தாமதத்துக்கான காரணங்களை எழுத்து மூலம் விண்ணப்பதாரருக்கு தெரிவித்துவிட்டு, அவர் மேலும் 15 நாட்கள் (மொத்தம் 45 நாட்கள்) எடுத்துக் கொள்ளலாம்.

## இரண்டாவது மேல்முறையீடு

முதல் மேல்முறையீடு அனுப்பிய 30 நாட்களுக்குள் பதில் கிடைக்கப் பெறவில்லை என்றாலோ, அல்லது கொடுத்த தகவல்/பதில் திருப்தி அளிக்கவில்லை என்றாலோ, தகவல் அளிப்பதற்காக கோரப்படும் கூடுதல் கட்டணம் அதிகமென்று விண்ணப்பதாரர் கருதினாலோ முடிவு பெறப்பட்ட 90 நாட்களுக்குள் தகவல் ஆணையத்திடம் இரண்டாவது மேல்முறையீடு செய்யலாம்.


...வானமே எல்லை...
வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
0452 4352690, 72003 89831
www.vaanamaeellai.org

## விலக்களிக்கப்பட்ட தகவல்கள்

தகவல் பெறுவதில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்ட தகவல்கள்

பொதுவாக கீழ்கண்ட வகையில் விலக்களிக்கப்பட்ட தகவல்களை அளிக்க தேவையில்லை.

- ☒ இறையாண்மை, நாட்டின் பாதுகாப்பு, வளம் ஆகியவற்றை பாதிக்கக்கூடிய தகவல்கள்
- ☒ நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்ட தகவல்
- ☒ நாடாளுமன்றத்தின் அல்லது சட்ட மன்றத்தின் சிறப்புரிமையை மீறும் வகையிலான தகவல்
- ☒ மூன்றாம் தரப்பினரின் சந்தை போட்டி நிலையை பாதிக்கும் வகையிலான வணிக ரகசியம், அறிவுசார் சொத்துரிமைகள்
- ☒ பொறுப்பாண்மை சார்பில் நம்பகத்தன்மையில் பெறப்பட்ட தகவல்கள்
- ☒ வெளிநாட்டு அரசுகளிடமிருந்து பெறப்பட்ட இரகசிய தகவல்கள்
- ☒ எவர் ஒருவரின் உயிருக்கேனும், உடல் பாதுகாப்பிற்கேனும் ஊறு விளைவிக்கக் கூடிய தகவல்.
- ☒ சட்டத்தை நிலைநிறுத்த அல்லது பாதுகாப்புக்காக தரப்பட்ட தகவலின் மூலத்தைக் காட்டி கொடுக்கக் கூடிய தகவல்
- ☒ புலனாய்வு, குற்றவாளிகளை கைது செய்தல் மற்றும் நீதிமன்ற வழக்கு தொடுப்பு ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கக் கூடிய தகவல்கள்
- ☒ அமைச்சரவை ஆவணங்கள்.

மேற்கண்ட பட்டியலில் விதிவிலக்கு பெற்றிருந்தாலும், ஒருவேளை வெளியிடப்படுவதற்கு பொது மக்களின் தேவை, பாதுகாக்கப்பட்ட ரகசியத்தை விட இன்றியமையாததாக இருந்தால் அரசு அலுவலர் தகவல் வழங்க அனுமதிக்கலாம்.

இவ்வாறு மேல்முறையீடு செய்யும்போது முதலில் பொது தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவின் நகல், முதல் மேல்முறையீடு செய்த மனுவின் நகல், திருப்தி இல்லா பதில் கடிதத்தின் நகல் ஆகிய அனைத்து ஆவணங்களுடன் ஆணையத்திடம் மேல் முறையீடு செய்ய வேண்டும். இதற்கும் கட்டணம் ஏதும் இல்லை.

தமிழக அரசின் கீழ்வரும் துறைகளுக்கு, மாநில தலைமை தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம், எண்.19, அரசு பண்ணை இல்லம், (Pension Pay Office Back Side மற்றும் சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), சைதாப்பேட்டை, சென்னை – 600 015. தொலைபேசி எண்: 044–29515580, பேக்ஸ்: 044–24357580, Email: sic@nic.in Web: www.tnsic.gov.in <http://www.tnsic.gov.in> என்ற முகவரிக்கு உரியவர்.

மத்திய அரசின் கீழ்வரும் துறைகளுக்கு , Central Information Commission, CIC Bhawan, Baba Gangnath Marg, Munirka, New Delhi - 110 067 Helpline No.: 011-26183053 Email: fdesk-cic@gov.in, Fax: 01126186536 Web: www.cic.gov.in <http://www.cic.gov.in> என்ற முகவரிக்கும் மேல் முறையீடு செய்யலாம்.

மத்திய தகவல் ஆணையம் மற்றும் மாநில தகவல் ஆணையங்கள் குறிப்பிட்ட சில தகவல்களை மனுவுடன் அளிக்க வேண்டும் என வரையறுத்துள்ளது.

## தகவல் ஆணையம்

தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 15–ன்படி தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் உருவாக்கப்பட்டு, அவ்வாணையம், தலைமை தகவல் ஆணையருடன் சேர்த்து மொத்தம் 7 தகவல் ஆணையர்களுடன் இயங்கி வருகிறது.

மத்திய தகவல் ஆணையம் தலைமை தகவல் ஆணையருடன் சேர்த்து 11 ஆணையர்களுடன் தற்போது செயல்பட்டு வருகிறது.

## ஆணையத்திற்கு நீதிமன்ற அதிகாரம்

மேல்முறையீடு அல்லது புகார் ஆகியவற்றை விசாரிக்கும்போது உரிமையியல் நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரங்களும் ஆணையத்திற்கும் உண்டு. மேலும் தண்டனை விதிக்கவும் கட்டளைகள் பிறப்பிக்கவும் அதிகாரம் உண்டு.

## தகவல் வழங்கும் அலுவலர்களின் தவறுகைக்கு எதிரான முறையீடு (புகார்)

பொது தகவல் அலுவலர்/முதல் மேல் முறையீட்டு அலுவலர் ஆகியோர் தகவல்களை வேண்டுமென்றே வழங்க மறுத்தல்/குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழங்க தவறுகை புரிதல்/ தகவல் அளிப்பதற்காக கோரப்படும் கூடுதல் கட்டணம் நியாயமற்றதாக கோருதல்/ முழுமையற்ற அல்லது பொய்யான தகவல்களை வழங்குதல்/தொடர்புடைய பதிவுருக்களை அழித்தல் உள்ளிட்ட இதர விஷயங்கள்களுக்கு எதிராக மேற்படி அலுவலர்களுக்கு அபராதம் மற்றும் துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகள் போன்ற தண்டனைகளை விதிக்க கோரியும் அல்லது குறித்த நேரத்தில் தகவல் பெற முடியாமைக்கு ஈட்டுத் தொகை வழங்க வேண்டியும் கோரி பிரிவு 18 (1)–ன் கீழ் தகவல் ஆணையத்திடம் புகார் செய்யலாம்.

தகவல்களை நியாயமான காரணம் ஏதுமின்றி வழங்க மறுத்தல்/குறிப்பிட்ட காலவரையறைக்குள் வேண்டுமென்றே வழங்க தவறுதல்/முழுமையற்ற அல்லது பொய்யான தகவல்களை வழங்குதல்/கோரிக்கையின் பொருளாக இருந்த தகவலை அழித்தல்/தகவல் வழங்குவதை எந்த முறையிலும் தடுத்தல் உள்ளிட்ட செயல்களில் ஈடுபடும் தகவல் வழங்கும் அலுவலர் மீது விண்ணப்பத்திற்கு உரிய தகவல் அளிக்கப்படும் வரை ஒவ்வொரு நாளுக்கும் அபராதமாக ரூ.250/– வீதம் 25 ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல் தகவல் வழங்கும் அலுவலரிடமிருந்து அபராதம் வசூலிக்க ஆணையம் உத்தரவு பிறப்பிக்கலாம். இருப்பினும் அபராதம் விதிக்கப்படுவதற்கு முன்பு, சம்பந்தப்பட்ட தகவல் வழங்கும் அலுவலருக்கு போதுமான வாய்ப்பளிக்கபடுதல் வேண்டும். மேற்படி தகவல் வழங்கும் அலுவலர், தான் நியாயமாகவும், கவனத்துடனும், செயல்பட்டுள்ளதை மெய்ப்பிக்கும் பொறுப்பு, அவரையே சாரும். இந்த அபராதத் தொகை சம்பந்தப்பட்ட அலுவலரின் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் சேர்க்கப்படும். மேற்படி அலுவலர் அபராதம் கட்டினாலும், அதன் பின்பும் சரியான தகவலை மனுதாரருக்கு கொடுத்தாக வேண்டும்.


வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
0452 4352690, 72003 89831
www.vaanamaeellai.org

மனுதாரருக்கு தகவல் கொடுக்கப்படாததால் உண்மையிலேயே அவருக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் ஆணையம் கருதுமேயானால், சம்மந்தப்பட்ட அலுவலர் மனுதாரருக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என ஆணையம் தீர்ப்பளிக்கலாம். மேலும், மேற்கண்ட சூழ்நிலைகளில், மேற்படி தகவல் அலுவலருக்கு எதிராக, பொருந்ததக்க பணிவிதிகளின்படி, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் சம்மந்தப்பட்ட துறைக்கு தகவல் ஆணையம் ஆணையிடலாம். மாநில மற்றும் மத்திய தகவல் ஆணையத் தீர்ப்பினை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்

## முக்கியத்துவம் வாய்ந்த சில தீர்ப்புகள்

### தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கங்களுக்கு முரணான மற்றும் உள்ளடங்காத தகவல்கள்

தகவல் அளித்தல் என்பது அரசின் செயல்பாடு வரம்பிற்குட்பட்ட நிதி ஆதாரங்கள் முதலிய பொது நலன்களுக்கு ஊறின்றி சமன் செய்ய வேண்டும்.

– தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் முன்னுரை (Preamble)

- பொது அதிகார அமைப்பின் வளங்களை திசை திருப்பக்கூடிய அளவில் / இயல்பு அரசு பணிகளை பாதிக்கும் வகையில் அதிகப்படியான தகவல்களை கோருதல் இச்சட்டத்தின் நோக்கத்தை சிதைக்கும் செயலாகும்.

  SA No.33073/C/2014 Tamil Nadu State Information Commission, Date: 07.01.2016
  CIC/MP/A/000647/2014 Central Information Commission, Date: 30.06.2015.

- எவ்வாறு/ஏன் போன்ற கேள்விகள் எழுப்புவதும், தெளிவுரைகள் (அ) ஆலோசனைகள் வேண்டுவதும், கருத்து/காரணங்கள் கேட்பதும் இச்சட்டத்தின் கீழ் 'தகவல்' எனும் வரையறைக்குள் உள்ளடங்குவது இல்லை.

  SA No.9138/C/2014 Tamil Nadu State Information Commission, Date: 11.05.2015.
  CIC/CC/A/002992/2014 Central Information Commission, Date: 05.01.2016.

- இல்லாத தகவலை பல்வேறு ஆவணங்களிலிருந்து சேகரித்து, ஆய்வு செய்து தயாரித்து / தொகுத்து வழங்கக் கூடியவற்றை வழங்க வேண்டியதில்லை.

  SA No.2905/B/2014 Tamil Nadu State Information Commission, Date : 26.11.2015.
  CIC/BS/A/001789/2013 Central Information Commission, Date : 05.11.214.

- அரசு இயந்திரத்தை கணக்கில்லாமல் கேள்விகள் கேட்டு பொது அதிகார அமைப்பை நிலைகுலைய செய்வதற்கு இச்சட்டத்தில் இடம் இல்லை.

SA No.19353/C/2014 Tamil Nadu State Information Commission, Date: 29.04.2015.
SA No.1290/B/2009 Tamil Nadu State Information Commission, Date: 14.06.2010.

- தகவல் பெறும் சட்ட நடைமுறைகளை 'உதவி மையம்' போலவோ, குறுக்கு விசாரணை செய்யவோ பயன்படுத்த முயற்சிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

SA No.31525/A/2014 Tamil Nadu State Information Commission, Date: 17.07.2015.

- குறிப்பு கோப்பு (Note File) விவரங்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட கூடியவையாகும். பிரிவு 8(1) (e) மற்றும் 8 (1) (j) பிரிவின்படி நிராகரிக்க இயலாது.

CIC/BS/A/002408/2015 Central Information Commission, Date: 15.10.2015.
CIC/YA/A/000517/2014 Central Information Commission, Date: 01.04.2015.

- நீதிமன்ற தீர்ப்பு உத்தரவுகள்/தீர்ப்புகள்/கோப்புகள் ஆகியவற்றின் நகல்களை நீதிமன்ற நடைமுறையை பின்பற்றி உரிய விதிகளின் கீழ் பெற இயலும். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற இயலாது.

SA No.08/2016 Tamil Nadu State Information Commission, Date: 22.02.2016.

- நில அளவை வரைபட நகலை பெற அலுவலக நடைமுறைப்படி, உரிய கட்டணம் செலுத்தி பெற வேண்டும்.

SA No.15809/A/2015 Tamil Nadu State Information Commission, Date: 04.01.2016.

- மனுதாரர் பதிவேடுகள்/கோப்புகளை பார்வையிட வரும்போது அவருக்கு உதவியாக இன்னொரு நபரையும் (வழக்கறிஞர்/மொழிபெயர்ப்பாளர் உள்ளிட்ட) அனுமதிக்க வேண்டும்.

CIC/AD/A/000761/2013 Central Information Commission, Date: 04.04.2013.

- மாதிரிப்பொருட்கள் (Samples) மனுதாரர் கேட்டால் பணி நிறைவடைந்தாலும் அல்லது பணி நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் வழங்க வேண்டும்.

CIC/WB/A/000259/2006 Central Information Commission, Date: 22.05.2006.
SA No.15125/2015 Tamil Nadu State Information Commission, Date: 22.01.2016.

- ஒவ்வொரு மனுவிற்கும் தனித்தனியே இரண்டாவது மேல்முறையீடு சமர்ப்பிக்கப்பட வேண்டும். பல்வேறு மனுக்களை சேர்த்து ஒரே மனுவாக இரண்டாம் மேல்முறையீடு செய்ய இயலாது.

SA No.13988/E/2015 Tamil Nadu State Information Commission, Date: 21.04.2016.


வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்
0452 4352690, 72003 89831
www.vaanamaeellai.org

- குறிப்பிட்ட கால கெடுவிற்குள் தகவல் தரவில்லை எனில் மனுதாரரிடமிருந்து பிரிவு 7(6)–ன் கீழ் தகவல் வழங்குவதற்கு கட்டணம் வசூலிக்கக் கூடாது.

CIC/SH/A/000694/2014 Central Information Commission, Date: 20.05.2015.

- கோப்பு பதிவேடு காணவில்லை எனில், அதனை தேடுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் அந்த கோப்பினை தொலைத்தவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். காணாமல் போன கோப்பினை புதிதாக உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். காணமல் போன கோப்பு பதிவேடு சம்பந்தமாக விசாரணை நடத்த உத்தரவு வழங்க தகவல் ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு.

CIC/DS/A/002376/2013 Central Information Commission, Date: 05.09.2014.
CIC/DS/A/001858/2013 Central Information Commission, Date: 01.04.2015.

- தகவல் உரிமைச் சட்ட மனுக்கள் மீது அக்கறையின்றி செயல்படுதல் மற்றும் கவனக்குறைவாக செயல்படுதலானது மனுதாரருக்கு இழப்பீடு தர நேரிடும்.

CIC/BS/A/001888/2013 Central Information Commission, Date: 28.11.2014.
SA No.14744/D/2013 Tamil Nadu State Information Commission, Date: 05.08.2013.

## தகவல் பெறும் உரிமை இனி இணைய வழியில் : விண்ணப்பம்

இதுவரை கடிதம் மூலமாகவே பெறப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்டம், 2005, தற்போது இணைய வழி மூலம் தகவல் பெறும் சேவையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அரசால் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள இணையதளம் மூலம் தகவல் பெறும் சேவையில் கட்டணம் ரூ. 10/– இணையதள வங்கி மூலம் (எஸ்.பி.ஐ. மற்றும் அதுசார்ந்த வங்கிகள்) செலுத்தி, இந்த இணையதள சேவையை பயன்படுத்தலாம். பதிவு செய்யப்பட்ட மனு குறிப்பிட்ட துறைக்கு அனுப்பப்பட்ட உடன் மனுதாரரின் மொபைல் எண்ணிற்கு தகவல் அனுப்பப்படும். மென்பொருளின் சோதனை முயற்சியாக, தற்போது தமிழ்நாடு அரசு பணியாளர் & நிர்வாக சீர்திருத்தத் துறையில் மட்டும் இந்த இணையதள செயல்முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இச்சோதனைக்குப் பிறகு, பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் அரசின் அனைத்து அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கான பிரத்யேக இணையதள போர்ட்டல் உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இனி தேவையான தகவல்களைப் பெற கீழ்காணும் வலைதள முகவரியை பயன்படுத்திப் இணைய வழி விண்ணப்பம் அனுப்பலாம்.

https://www.rtionline.gov.in/

https://rtionline.tn.gov.in/request/request.php?lan>=E

## தகவல் பெறும் உரிமை சட்டம், 2005 பிரிவு 7 (1) மற்றும் 7 (5)-ன் கீழ் வழங்கப்படும் தகவல்களுக்கு செலுத்த வேண்டிய கட்டண விவரம்

| விதி | இனம் | விவரம் | கட்டணம் | செலுத்தும் முறை |
|---|---|---|---|---|
| 3 (b) (i) | ஆவணங்களின் நகல்கள் வழங்குவது | A4 அல்லது A3 அளவு தாள் பக்கம் ஒன்றிற்கு | ரூ. 2/– | பணம் அல்லது வரைவோலை அல்லது வங்கி வைப்பகக் காசோலை |
| 3 (b) (ii) | | பெரிய அளவு தாள் நகலுக்கு அதற்கு உரிய விலை அல்லது செலவான தொகை | உரிய விலை | |
| 3 (b) (iii) | மாதிரிகள் பெற | அவற்றிற்கு உரிய விலை | உரிய விலை | |
| 3 (b) (iv) | ஆவணங்கள் பார்வையிடுவது | முதல் ஒரு மணி நேரத்திற்கு கட்டணம் இல்லை. பின்பாக ஒரு மணி நேரத்திற்கு (அல்லது அதன் பகுதி தொகை) | ரூ. 5/– | |
| 3 (c) (i) | டிஸ்க் அல்லது பிளாப்பி வடிவில் வழங்குவது | டிஸ்க் அல்லது பிளாப்பி ஒன்றிற்கு | ரூ. 50/– | |
| 3 (c) (i) | விலை நிர்ணயிக்கப்பட்ட பதிப்புகள் | நிர்ணயிக்கப்பட்ட விலை அல்லது கோரும் பகுதிகளுக்கு ஒளிப்பட நகலுக்கு ஒன்றிற்கு | ரூ. 2/– | |

குறிப்பு: பொதுத் தகவல் அலுவலர் மேற்கண்ட அட்டவணையின்படி பெற்ற தொகையை கீழ்கண்ட கணக்கு தலைப்பில் செலுத்த வேண்டும்.

"0070.00 Other Administrative Services – 60 Other Services - 118 Receipts under Right to Information Act, 2005 - AA - Collection of fees under Right to Information (Fees) Rules, 2005" (DPC 0070 60 118 AA 005)

**(அல்லது)**

மனுதாரர் மேற்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் கருவூலம் / சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் / பாரத வங்கி / ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா மூலம் கட்டணத்தைச் செலுத்தி அதற்கு சான்றாக செலானை பொதுத் தகவல் அலுவலருக்கு இணைத்து அனுப்ப வேண்டும்.

# புத்தகங்களை அஞ்சல் மூலம் பெறுவதற்கு...







A/C No. : 4346059654
Name : Ramesh Mahadev
Bank : Kotak Mahindra Bank
Branch : Uthangudi, Madurai
IFSC : KKBK0008720

UPI ID : 7200389831@upi



Paytm, Google Pay, Phone Pay, NEFT or
Other Online Transfer to 7200389831

புத்தக பிரதியானது ஐந்து வேலை நாட்களுக்குள் (Within 5 Working Days)
கூரியர் (Courier Service) மூலமாக தங்களுக்கு கிடைக்கப்பெறும்.

மேற்படி வகையில் செலுத்தியமைக்கான தொடர்புடைய இரசீதின் விவரங்களுடன் தங்களது பெயர், முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு, கீழ்க்கண்ட வாட்ஸ்அப் (அ) தொலைபேசி எண் (அ) மின்னஞ்சலுக்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றினை அனுப்புங்கள்.

**டாக்டர். ரமேஷ் மகாதேவ், எல்.எல்.எம்., பி.ஹெச்.டி. (சட்டம்)**
உயர்நீதிமன்ற வழக்கறிஞர் / நிறுவனர் / மேனாள் உதவி ஆணையர்
வலலுநர் குழு வழக்கறிஞர் – இந்து சமய அறநிலையத்துறை

## அம்மா மல்லிகா - மகேஸ்வரி அன்னதான அறக்கட்டளை

3/145, கே.பி.பி. டவர், கோடக் மகிந்திரா வங்கி மேல்தளம்,
(மீனாட்சி மிஷன் மருத்துவமனை அருகில்),
மேலூர் மெயின் ரோடு, உத்தங்குடி, மதுரை-625 107
Email : drrameshmahadevadvocate@gmail.com
தொடர்புக்கு : **0452-4352690, 72003 89831 (WhatsApp )**
Website : www.vaanamaeellai.org

Reg. No. 31/2020

வானமே எல்லை சட்ட உதவி இயக்கம்

(A Movement for Justice through Legal Aid)

வாயில்லா, வழியில்லா உயிர்களின் நீதிக்கான சட்ட உதவி இயக்கம்



## டாக்டர். ரமேஷ் மகாதேவ், எல்.எல்.எம்., பி.ஹெச்.டி. (சட்டம்)

உயர்நீதிமன்ற வழக்கறிஞர் / நிறுவனர் / மேனாள் உதவி ஆணையர்

வல்லுநர் குழு வழக்கறிஞர் – இந்து சமய அறநிலையத்துறை

எனது சட்டம் சார்ந்த கற்றலை **26.09.2005–ல்** அரசு சட்டக் கல்லூரி கோயம்புத்தூரில் தொடங்கிய முதலாமாண்டிலேயே மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்றதற்கு பல்கலைக்கழகத்தினால் சான்றும், அதற்கான ரொக்க கொடை ஈழியும் பெற்றதோடு, தொடர்ந்து எனது முதுநிலை சட்டக்கல்வியினை புது தில்லியில் (New Delhi) மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றத்தின் (Hon'ble Supreme Court) நேரடி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் சட்ட ஆராய்ச்சி நிறுவனமான 'இந்திய சட்ட நிறுவனத்திலும்' (The Indian Law Institute, New Delhi) பின்னர் சட்டக்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இந்தியாவிலேயே முதன்மையான சட்டக்கல்வி நிறுவனமாக கருதப்படும் ஹைதராபாத்தில் (Hyderabad) அமையப்பெற்ற 'தேசிய சட்டக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில்' (National Academy of Legal Studies and Research, Hyderabad) சர்வதேச வணிக சட்ட ஆராய்ச்சியில் 'முனைவர்' பட்டத்தினையும் (Doctorate in International Trade Laws) பெற்றேன்.

மேலும் இந்திய பல்கலைக்கழக மானியக் குழுவினரால் (University Grants Commission) நடத்தப்படும் தேசிய அளவிலான கல்லூரி விரிவுரையாளர்களுக்கான (சட்ட உதவி பேராசிரியர்) தகுதி (UGC-National Eligibility Test for Lectureship) தேர்வில், 'இளநிலை ஆராய்ச்சி அறிஞர்' (Junior Research Fellowship) எனும் அறிவிக்கையுடனான சிறப்பு நிலை தேர்ச்சியும் பெற்றேன். மேலும் **6 1/2** ஆண்டுகளுக்கு மேல் வழக்கறிஞராக உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்களில் (Hon'ble Supreme Court and High Courts) பணி அனுபவம் பெற்றிருக்கிறேன். மேலும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் (Tamil Nadu Public Service Commission) நடத்தப்பட்ட (Group I Services - Assistant Commissioner) தேர்வுகளில் தொடர்ந்து இருமுறை மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்று உதவி ஆணையர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு **30.04.2015** முதல் **15.09.2020** வரை புதுக்கோட்டை (Pudukkottai District) மற்றும் நாகப்பட்டினம் (Nagapattinam District) மாவட்ட உதவி ஆணையராக தொடர்ந்து சுமார் **5 1/2** ஆண்டுகளுக்கும் மேல் முழுமனநிறைவோடு சிறப்புற பணியாற்றி வந்திருக்கின்றேன்.

என்றும் / எப்பொழுதும் என் உள்ளார்ந்த உணர்வுகளுடன் ஒன்றிய பணியாக நான் கருதும் சட்டம் மற்றும் நீதித்துறை சார்ந்த (குறிப்பாக உயர்நீதி மன்ற வழக்கறிஞர்) பணிகளின் மீதான ஈர்ப்பின் காரணமாக நான் கடந்த **5 1/2** ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றி வந்த எனது மாவட்ட நிலை அலுவலர் அரசு பணியிலிருந்து (Group I Services - Asst. Commissioner / District Level Officer) **15.09.2020** அன்று பிற்பகலுடன் முறையாக பணிவிடுவிப்பு (By Resignation) பெற்று எனது உள்ளார்ந்த எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுத்திடும் பொருட்டு மதுரை, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையினை (Hon'ble High Court of Madras, Madurai Branch) மையமாக கொண்டு 'சட்ட அலுவலகம்' (Law Firm) ஒன்றையும், சட்டம் மற்றும் நீதித்துறை சார்ந்த உதவிகள் தேவைப்படும் / வழங்கப்படுவது அத்தியாவசியம் / அவசியம் என நான் என் மனதளவில் கருதும் மற்றும் தன்னை சட்டபூர்வமாக பாதுகாத்துக்கொள்ள இயலாத வாயில்லா வழியில்லா இவ்வுலக பிறப்புகளுக்கு / உயிர்களுக்கு (அனைத்து விதமான ஜீவராசிகளுக்கும்) எனது சட்ட பணியை / சேவையை விரும்பி வழங்கும் நோக்கத்துடன் 'வானமே எல்லை' (Vaanamae Ellai) எனும் பெயரிலான சட்ட உதவி சார்ந்த அறத்தொண்டு நிறுவனம் ( Free Legal Aid Foundation - NGO) (பதிவு எண் : **31/2020**) ஒன்றையும் அமைத்து செயல்பட தீர்மானித்து, மேற்படி பணிகளை மிகச்சிறப்பாக மேற்கொண்டு வருகிறேன்.